# பார்த்தன் பள்ளி

**அவனுக்கும் ஆசையுண்டு! :** பகவானை அடையும்வரை தான் நமக்கு ஆசை முதலானவை! அவனை அடைந்து விட்டால் ஆசை எல்லாம் நீங்கி விடுகிறது! என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். 'நாம் பூமியில் ஒருவருக்கு மகனாகப் பிறக்க வேண்டும்! எல்லோருடனும் பழக வேண்டும். நம் குணங்களைக் காட்ட வேண்டும்! அனைவருக்கும் உதவ வேண்டும்' என்பது பகவானின் ஆசை! பகவான் நம் மீது இயல்பாகவே கொண்டிருக்கும் இரக்கத்தினடியாகத் தோன்றியது இந்த ஆசை! ஆனந்தமயனாக இருக்கும் எம்பெருமானை மகனாகப் பெற்றெடுக்கும் தாய், 'இவன் என் மகன்' என்பதோடு மனநிறைவு அடைவதில்லை! தன் மகனின் அழகையும், அவனது ஒவ்வொரு

## ஸ்தலசயனத்துறைவார்

செயல்களையும் புதிது புதிதாகக் கண்டு மகிழவேண்டும் என்று ஆசைப்படுகிறாள்! இது இணையற்ற (விலக்ஷணமான) ஆசை! அருச்சுனனும் கண்ணனும் பிரியவே மாட்டார்கள்! பார்த்தனும் ஸாரதியும் இருக்குமிடத்தில் வெற்றித் திருமகள் நிலைத்திருப்பாள். பார்த்த-ஸாரதி என்ற இரண்டு பெயர்களும் ஒன்று சேர்ந்த பெருமான் எழுந்தருளி இருந்தால் அந்த இடத்தைத் திருமகள் நோக்கிக் கொண்டே! இருப்பாள் பகவான் நின்றவாறும், இருந்த வாறும், கிடந்தவாறும் பல இடங்களில் எழுந்தருளி இருக்கிறான். இந்த மூன்று நிலைகளிலும் பகவானை ஸேவிக்க ஆழ்வார்கள் ஆசைப்படுகிறார்கள்! அர்ச்சுனனுக்கும் இந்த ஆசை உண்டு. மஹா பாரதப்போர் தொடங்கும் முன் அர்ஜுனன் கண்ணனின் உதவியை நாடி அவனிருக்குமிடம் சென்றான். அப்போது கண்ணன் சயனித்துக் கொண்டிருந்தான்! 'ஏரார் கோலம் திகழக்' கிடந்திருப்பதை ஸேவித்து நின்றான். தேரோட்டியாகித் தேர்மீது அமர்ந்

திருக்கும்போது வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவித்திருக்கிறான். நின்ற திருக்கோலத்தில் காண ஆசைப்பட்டான். கண்ணன் பார்த்தன் பள்ளியில் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதித்தான். நின்று நம்மை அழைக்கிறான்.

**பான்மொழியாள் பாடுகின்றாள் :** திருமங்கையாழ்வாருக்கு பார்த்தன் பள்ளியில் மிகவும் ஈடுபாடு! இந்த எம்பெருமானின் ஸௌந்தர்யத்தில் மூழ்கி இருக்கிறார். தாயாகவும் மகளாகவும் இருந்து அனுபவிக்கிறார். பங்கயக் கண்ணழகில் மயங்காதவர் யார்? கண்ணனின் கண்ணழகைப் பற்றித் தாய் அடிக்கடி மகளுக்குக்கூறுவாள். இக்காரணம் பற்றியே எல்லோரும் 'கண்ணா! கண்ணா!' என்று அவனை அழைக்கிறார்கள் என்றும் கூறுவாள். இந்த மகளும் கண்ணா! என்று அழைக்கத் தொடங்கி விட்டாள். அவள் அழைக்கும் அழகையே பார்த்துக்கொண்டிருக்கிறாள் தாய்! 'நானும் பலமுறை கண்ணா! என்று கூறுவதுண்டு! ஆனாலும், இவள் அழைப்பது போல் என்னால் அழைக்க முடியவில்லையே!' என்று தனக்குள் பேசிக் கொள்வாள்.

ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் திருவரங்கனை அழகிய மணவாளா! என்று எல்லோரும் தான் கூறுகிறார்கள்! ஆயினும், ஆழ்வானின் திருக்குமாரர் பட்டர் 'அழகிய மணவாளா! என்று கூறும்போது இருக்கும் சுவை, மற்றவர்களின் சொல்லில் இராது, என்று பெரியோர்கள் கூறுவார்கள். ஆம்! பட்டர் 'அழகிய மணவாளா!' என்றும், ஆழ்வான் 'பேரருளாளா!' என்றும், "அனந்தாழ்வான் 'திருவேங்கட முடையானே!' என்றும், மதுரகவிகள் 'தென் குருகூர் நம்பி!' என்றும் அழைப்பது போல் யாரால் அழைக்க முடியும்! இவர்கள் சொல்லும் போதே தித்திக்கும்! அமுது ஊறும்!

தாமரையாள் கேள்வ! என் மகன் கண்ணு! என்று அழைக்கும் அழகை நேரில் வந்துபார்! உன்னை தேவர்கள் வணங்குகிறுர்களாம்! நீ ஆனந்தமே வடிவெடுத்தவனும்! உன்னை உலக நாயகனே! என்கிருன்! தேவ தேவன் என்கிருன்! இவன் இசையோடு சேர்ந்த மென்மைப் பேச்சுடையவன்! 'மதுரா மதுராலாபா' என்று உன்னுல் புகழத் தக்கவன்!' பார்த்தன்பள்ளி' என்று பலகால் புலம்புகிருளே! நீ இன்னும் என் மகள் மீது மனமிரங்காது இருப்பதேன்? என்கிருள்

**கண்ணனென்றும் வானவர்கள் காதலித்து மலர்கள் தூவும்**
**எண்ணனென்றும் இன்பனென்றும் ஏழுலகுக்காதி யென்றும்**
**திண்ணமாட நீடு நாங்கைத் தேவதேவனென்றென்றோதி**
**பண்ணனில் கல்ல மென்மொழியாள் பார்த்தன்பள்ளி பாடுவாளே!**

**சோழ வளநாடு :** சோழநாட்டைக் கூறும் போதெல்லாம் சோழ வளநாடு என்றே கூறுவது வழக்கம். கங்கையிற் புனிதமாகிய காவிரியாறு பாய்ந்து குன்ருவளத்தைத் தருகிறது. நெற்களஞ்சியமாக விளங்குகிறது. சோழநாடு சிறப்புறுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆயினும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றுண்டு! திலதமன்ன திருநாங்கூரைப் பெற்றிருப்பதாலேயே சோழமண்டலம் சிறப்புறுகிறது. திருமணங்கொல்லை, திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்) பார்த்தன் பள்ளி ஆகிய மூன்று திவ்ய தேசங்களைப் பெற்றதால் திருநாங்கூருக்குப் புகழ்.

திருமந்திரம், த்வயம், சரமசுலோகம் ஆகிய மூன்றினையும் சேர்த்து ரஹஸ்யத்ரயம் என்று கூறுவார்கள். திருமணங்கொல்லை திருமந்திரத்தை விளங்கச் செய்த இடம். திருமங்கை மன்னன் 'வாள் வலியால் மந்திரம் கொண்டார்.' திருவெள்ளக் குளம் த்வயார்த்தப் பிரகாசகம்!

பூவார் திருமாமகள் புல்கிய மார்பா!' என்று விளித்து திவ்ய தம்பதிகளின் சேர்த்தியில் கைங்கரியத்தைப் பிரார்த்திக் கிறார் ஆழ்வார்! பார்த்தன் பள்ளி என்ற இந்தத் திவ்ய தேசத்தில் பார்த்தஸாரதி அர்ஜுனனுக்கு எதிரில் நின்று 'மாமேகம் சரணம் வ்ரஜ', 'மாசுச:' என்று கூறுகிறான். ஆதலால், சரம சுலோகம் விளங்கிய இடம் என்று மகான் கள் மொழிந்தருள்வார்கள். உயிருக்கு நன்மை தரும் பொருள்களை மட்டுமே சோழ நாடு விளைவித்துக் கொடுக் கிறது' என்று நினைக்க வேண்டா! ஆத்மாவுக்கு நன்மை தரும் ரஹஸ்யத்ரயத்தை விளைவித்துக் கொடுத்துள்ளது! பிராட்டியே புகழ்ந்து பாடும் சிறப்புடைய பார்த்தன் பள்ளி யைப் பெற்று ஸ்ரீ வைஷ்ணவ உலகினுக்குக் கொடுத் துள்ளது! வளநாடு வாழி!

**சொன்னாலும் தெரியாது!** : ஆழ்வார்கள் உபதேசம் செய்யும் முறையைக் காணவேண்டும்! தன்னுடைய நெஞ்சுக்கே உபதேசம் செய்வார்கள். நெஞ்சு, அக்கரை யோடு உபதேசத்தைக் கேட்கும்போது 'நன்னெஞ்சே!' என்பார்கள்; கேளாத போது சாடுவார்கள்! நெஞ்சே! உனக்கு ஒன்று சொல்லுகிறன்; கேள். நான் சொல்லப் போவது உனக்கே உனக்கே தெரியும்! எனினும், நீ திருந்தும் வரை உபதேசத்தை நிறுத்த மாட்டேன். நீ திருந்தியவனாக ஆகவேண்டும்.

எம்பெருமான் பரமாத்மா; நாம் ஜீவாத்மா; "ஜீவாத்மா அறிவுடையது! இந்த ஆத்மா சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது! அழிவில்லாதது; மிகச்சிறியது; இன்பமயமாக இருப்பது! பகவானுக்கு சேஷப் பொருளாக இருப்பது." நாம் எல்லோரும் பகவானைச் சேர்ந்தவர்கள். அவன் நமக்குத் தலைவன்! அழிவில்லாதவன்! எங்கும் இருப்பவன்! வயது முதிர்ந்தாலும் இந்த உண்மையை சாத்திரங்களால் உணர்ந்து கொள்ள இயலாது! உபதேசத்

தினாலும், அனுபவத்தினாலும்தான் அறிந்து கொள்ள முடியும்! இதனைப் பிரகலாதன் மிகச் சிறு வயதிலேயே (பள்ளிக்குச் செல்லும் வயதிலேயே) அறிந்துத் தெளிந்திருந்தான். பகவானின் திருநாமத்தையே சொல்லிக் கொண்டிருந்தான். 'பகவான் இல்லை' என்பதை மகனுக்கு உணர்த்த வேண்டும் என்று இரணியன் எண்ணினான். 'எங்கு உளன் கண்ணன்?' என்று கேட்டான்! எங்குமுளன் கண்ணன்' என்றான் பிரகலாதன்! இந்தத் தூணில் இருக்கிறானா? என்று கேட்டான் தந்தை! 'இருக்கிறான்' என்றான் மகன்! மகன் சொல்லியவாறு நாராயணன் இருக்கிறானா என்பதைக் காண முயன்றான் தந்தை! ,பகவான், தான் எங்கும் இருப்பதைக் காட்ட வேண்டும்; நாம் ஸேவிக்க வேண்டும்' என்று விரும்பினான் பிரகாலதன்! இருவரும் பகவானை (நரஸிம்மனை) சேவித்தார்கள்! பிரகாலதன் தன் தலைவனை (ஸ்வாமியான எம்பெருமானை ஸேவிக்க ஆசைப் படவில்லையா! நெஞ்சே! நீயும் அவனைக் காண ஆசைப்பட வேண்டாமா!

பரம பதத்திற்கு (ஸ்ரீவைகுண்டத்திற்கு)ச் சென்று காண்கிறேன்; பாற்கடலுக்குச் சென்று காண்கிறேன் என்கிறாய்! அருகில் இருக்கும் பார்த்தன் பள்ளிக்குச் சென்றால் அவனை ஸேவிக்கலாமே! அருச்சுனனுக்கு உதவியவன் நமக்கு உதவமாட்டானா! அவனுக்கு ஸேவை ஸாதித்தவன் நமக்கு ஸேவை ஸாதிக்க மாட்டானா! அவன் மிகவும் எளியவன்! அடியார்கள் அவனைப் பணிந்தால், அவர்கள் இட்ட கட்டளைக்கு அவன் பணிந்து விடுவான். அவனை அடைவதே நம்பணி; நம்மைக் காப்பது அவன் பணி! பணி நெஞ்சே! நாளும் பரம பரம் பரனை! நன்மை யுண்டு! பிணியொன்றும் சாரா! என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

**ஒத்தமர ரேத்தும் ஒளிவிசும்பும் பாற்கடலும்**
**இத்தலத்திற் காண்பரிய என்னெஞ்சே!-சித்துணர்ந்த**
**தீர்த்தன் பள்ளிக்கிருந்து செப்ப வெளிநின்றானை**
**பார்த்தன் பள்ளிக்குள் பணி.**

*நூற்றெட்டு திருப்பதி-அந்தாதி (40)*